கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

தேதி : 17-10-2023

ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-17 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)

| வானிலை காரணி | 2023-10-18 | 2023-10-19 | 2023-10-20 | 2023-10-21 | 2023-10-22 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 15.0 | 3.0 | 10.0 | 10.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 32.0 | 32.0 | 32.0 | 31.0 | 31.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 23.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 92 | 92 | 92 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 84 | 84 | 84 | 82 | 82 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 4 | 4 | 3 | 3 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 90 | 90 | 110 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 31 முதல் 32 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலையானது 22-23 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 82 முதல் 92 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படலாம். காற்றின் வேகம் மணிக்கு 03 முதல் 04 கிலோ மீட்டர் வேகத்தில் கிழக்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் அக்டோபர் 22 முதல் அக்டோபர் 28 வரை மழை, அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

விவசாயிகள் கடைசி உழவின் போது ஒரு ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் அல்லது 5 கிலோ தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நுண்ணூட்ட கலவையை இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | மானாவாரி விவசாயிகள் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் பட்சத்தில் குறுகிய கால மற்றும் வறட்சியை தாங்கி வளரும் திருர்குப்பம் 15, ஆடுதுறை 53, கோயம்புத்தூர் 53 மற்றும் கோயம்புத்தூர் 55 போன்ற ரகங்களை விதைத்து பயன்பெறலாம். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நெல் சாகுபடியில் தேவையான அளவு மணிச்சத்தினை பெற அடியுரமாக ஒரு ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரம் இடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் விதையை கடினப்படுத்தி விதைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விதை கடினப்படுத்த ஒரு கிலோ விதையை ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு சமவிகித கரைசலில் (10 கிராம், ஒரு லிட்டர் நீர் என்ற அளவில்) 16 மணி நேரம் ஊற வைத்து பின் அதன் பழைய ஈரப்பத்திற்கே திரும்பும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் இயந்திர விதைப்பானை பயன்படுத்துவதால் சரியான ஆழத்திலும் சரியான இடைவெளியை பராமரிப்பதன் வாய்ப்பையும், வறட்சியின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்புகளை குறைப்பதற்கான வாய்ப்புள்ளது. |
| நெல் | நெல்லுக்கு முதல் மேலுரமாக பயிர் முளைத்த 20 முதல் 25 நாட்களில் ஒரு ஏக்கருக்கு யூரியா @ 25 கிலோ மற்றும் பொட்டாஷ் @ 10 கிலோ இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. |
| நெல் | பயிர்களுக்கு களை முளைத்த பிறகு அடிக்கக்கூடிய களைக்கொல்லியான பிஸ்பைரிபாக்சோடியம் 10% SC @ 80 ml மருந்தை ஒரு ஏக்கருக்கு தெளிப்பதன் மூலம் களையை கட்டுபடுத்தலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | சிவப்பு கூண்வண்டு தாக்கப்பட்ட மரங்களில் புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்புநீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும். மரத்தில் ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்ற பின் வெளியே தள்ளப்பட்ட மர நாறுகளும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 1 மில்லி உடன் 1 மில்லி தண்ணீர் கலந்துசெலுத்தவும். |
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | கால்நடைகளில் புற ஒட்டுண்ணியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் இதனை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி நீக்க மருந்து கொண்டு தூய்மைப்படுத்தலாம். |